## October 10, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா - பிரிட்டன் இடையே ரூ.7,122 கோடியிலான பாதுகாப்புத் துறைக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா வந்துள்ள பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி இடையே மும்பையில் நடைபெற்ற விரிவான பேச்சு வார்த்தையில் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.
   i. வான் பாதுகாப்புத் திறனை மேலும் வலுப்படுத்த இலகுரக பன்முக பயன்பாட்டு ஏவுகணைகள் (எல்எம்எம்) கொள்முதலுக்கு ரூ.4,150 கோடி ஒப்பந்தமும், கடற்படைக் கப்பல்களுக்கு மின் உந்துசக்தி என்ஜின்கள் கொள்முதலுக்கு ரூ.2,972 கோடி ஒப்பந்தமும் இதில் அடங்கும் என பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சகம் அறிவித்தது.
   ii. வர்த்தகத் தலைவர்கள், தொழில் முனைவோர், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் என 125 பிரதிநிதிகளுடன் இரண்டு நாள் பயணமாக பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் மும்பைக்கு வந்தார். இந்தியா - பிரிட்டன் இடையே கடந்த ஜூலையில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமான நிலையில், அதன் கீழ் இருதரப்பு வர்த்தக உறவை வலுப்படுத்தும் விதமாக இந்த சுற்றுப் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார்.
   iii. இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் விரிவான கடல்சார் பாதுகாப்புக் கூட்டுறவை உருவாக்க இந்தப் பேச்சுவார்த் தையில் இரு நாடுகளும் உறுதியேற்ற தோடு, இந்திய-பசிபிக் பெருங்கடல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பிராந்திய கடல்சார் அதிநவீன பாதுகாப்பு மையத்தை (ஆர்எம்எஸ்சிஇ) அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.
   iv. ராணுவப் பயிற்சி தொடர்பான தனி ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கையொப்பமானது. அதன் கீழ், இந்திய விமானப் படையின் போர் விமானப் பயிற்றுநர்கள், பிரிட்டனின் ராயல் விமானப் படையில் பயிற்சி யாளர்களாகப் பணிபுரிய உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
   v. இந்தியாவில் பிரிட்டனைச் சேர்ந்த 9 பல்கலைக்கழங்கள் தங்களின் கல்வி வளாகங்களை அமைக்க முன்வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தார். இவை, குருகிராம், அகமதாபாத், மும்பை, பெங்களூரு ஆகிய நகரங்களில் அமைய உள்ளதாக பின்னர் செய்தியாளர்களிடம் வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.
2. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்மொழிந்த 20 அம்ச அமைதித் திட்டத்தின் முதல்கட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக பிணைக் கைதிகளை விடுவிக்கவும், போரை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளவும் ஹமாஸும், இஸ்ரேலும் ஒப்புக்கொண்டன.
3. 2024-25- நிதி யாண்டில் இந்தியா வின் நிலக்கரி ஏற்று மதி 23.4 சதவீதம் உயர்ந்துள்ளது.
   i. கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் நாட்டின் நிலக்கரி ஏற்றுமதி 19.08 லட்சம் டன்னாகப் பதிவானது. முந் தைய 2023-24-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 23.4 சதவீதம் அதிகம்.
   ii. நேபாளம், வங்கதேசம், பூடான் ஆகிய நாடுகளுக்கு இந்தியா நிலக்கரியை ஏற்றுமதி செய்கிறது.
   iii. நிலக்கரி ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம், இறக்குமதிக்கான மாற்றுவழிகளை எளிதாக்கி எரிசக்தியில் தற்சார்பு அடைய இந்தியா முயல்கிறது.
   iv. இது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதுடன் அரசுக்கு வருவாயை அதிகரிக்கும் என்று அந்த தரவுகளில்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. ஆப்கானிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் மௌலவி அமீர் கான் முத்தாகி தில்லி வந்தார்.
   i. கடந்த 2021-இல் பிரதமர் அஷ்ரஃப் கனி தலைமையிலான அரசு கவிழ்ந்ததைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பை தலிபான் கைப்பற்றியது. இதைத்தொடர்ந்து, அந்நாட்டு அமைச்சர் ஒருவர் இந்தியாவுக்கு முதல்முறையாகப் பயணம் மேற்கொள்கிறார்.
   ii. தலிபான் அரசின் அனைத்துத் தலைவர்கள் மீதும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்துள்ளது. முத்தாகி கடந்த மாத இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில், அவர் மீதான ஐ.நா. வின் பயணத் தடையால் அந்தப் பயணம் ரத்தானது. இந்நிலையில், இந்தியா செல்வதற்காக முத் தாகிக்கு அக்.9 முதல் 16 வரை பயணத் தடையில் இருந்து தற்காலிக விலக்கு அளித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கமிட்டி கடந்த செப்.30-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இதைத் தொடர்ந்து அவர் இந்ததியாவுக்குப் பயணம்மேற்கொண்டுள்ளார்.
   iii. தனது 6 நாள் பயணத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் ஆகியோரை சந்தித்து முத்தாகி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
   iv. ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசுடனான இந்தியாவின் உறவுகள், முத்தாகியின் வருகையால் புதிய வடிவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
5. இந்தியா-சீனா இடையே நேரடி விமான சேவை மீண்டும் தொடங்கப்படுவது இருநாட்டு உறவை மேம்படுத்துவதில் மிகவும் சாதகமான முன்னேற்றமாக அமையும் என்று சீன வெளியுறவு அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.
6. 2025-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு லாஸ்லோ கிராஸ்ன ஹோர்காய் (71) என்ற ஹங்கேரி எழுத்தாளருக்கு அறிவிக்கப்பட்டது.
   i. கடும் பயங்கரவாத சூழலுக்கு மத்தியிலும் கலையின் சக்தியை உறுதிப்படுத்தியதை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுவதாக ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள நோபல் தேர்வு கமிட்டிகளில் ஒன்றான இலக்கியத்துக்கான ராயல் ஸ்வீடன் அகாதெமி தெரிவித்தது.
7. தமிழ்நாட்டின் புத்தொழில் (ஸ்டார்ட் அப்) சூழலை வலுப்படுத்தும் விதமாக ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் இணை உருவாக்க நிதியம் தொடங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
   i. தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கத்தின் சார்பில் கோவை, கொடிசியாவில் உலகப் புத்தொழில் மாநாடு -2025 இரண்டு நாள்கள் நடைபெறுகிறது. இந்த மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
8. இரண்டு ஆண்டு கால போர், கடுமையான உணவுப் பற்றாக்குறை காரணமாக, காஸா வில் 5 வயதுக்கும் குறைவான சுமார் 55,000 சிறுவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறை பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்; அவர்களில் 12,800-க்கும்மேற் பட்டோர் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர் என்று ஐ.நா. அமைப்பின் புதிய ஆய்வு தெரிவிக்கிறது.
9. மதுரையில் வேலம்மாள் கல்விக் குழுமம் சார்பில் அமைக்கப்பட்ட சர்வதேச தரவிலான கிரிக்கெட் மைதானத்தை, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள்

கேப்டன் எம்.எஸ். தோனி வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

i. மதுரை சிந்தாமணி சுற்றுவட்டச் சாலை அருகே வேலம்மாள் கல்விக் குழுமம் சார்பில் 11.5 ஏக்கர் பரப்பில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த, கிரிக்கெட் மைதான தயாதிரிப்பு நிபுணர்களின் ஆலோசனையுடன் இந்த மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது.

ii. அறைகள், வலைப் பயிற்சிக்கான வசதிகள், உடற்பயிற்சிக் கூடம், செய்தியாளர்கள் அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான இருக்கைகள், 7,000-க்கும் அதிகமான பார்வையாளர்கள் அமரும் வசதிகளைக் கொண்டதாக இந்த மைதானம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது, சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு அடுத்தபடியாக தமிழகத்தின் இரண்டாவது சர்வதேச கிரிக்கெட்மைதானம் என்று கூறப்படுகிறது.

10. பிகார் சட்டப் பேரவைத் தேர்தலில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொய் தகவல்களைப் பரப்பக் கூடாது என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

i. செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் மூலம் உண்மையானது போலவே தோன்றும் பல விடியோக்கள், புகைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன. இதுபோன்ற தொழில்நுட்பங்கள் அவதூறு பரப்புவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இது தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.